

## தடகளப் போட்டியில் தங்கம் வென்ற

# நேசமணி கிறிஸ்தவ கல்லூரி மாணவருக்கு பாராட்டு

குழித்துறை, மார்ச்.7— கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி சார்பில் வணிகவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவன் ஆபிரகாம் பல்கலைக்கழக அளவில் 5 ஆயிரம் மீட்டர், 10 ஆயிரம் மீட்டர் ஓட்ட போட்டி மற்றும் கிராஸ் ஓட்டபோட்டியிலும் வெற்றி பெற்று மூன்று தங்கப் பதக்கங்களை பெற்றார்.

மேலும் மாநில அளவிலான தடகளப் போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் மற்றும் பத்தாயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் மாநில அளவில் 2 தங்கப்பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளார். பல்கலைக் கழக அளவிலான 5 ஆயிரம் மீட்டர் ஓட்ட போட்டியில் புதிய சாதனை இலக்கினையும் எட்டியுள்ளார்.

இவரை கல்லூரி முதல்வர் முனைவர் பால்ராஜ், கல்லூரி தாளாளர் டாக்டர். வினோத்குமார், மற்றும் பேராசிரியர்கள் மாணவர்கள் வாழ்த்தினார்.